Articles in magazine

Source: Sri Senpaga Vinayagar Temple. SANGHU. January 2002.

# அம்பியவாகர் காலமானார்



சிங்கப்பூரின் மூத்த கல்விப் போதனையாளர் திரு வே. அம்பியவாகர் நேற்று காலமானார். அவருக்கு வயது 96.

ராஃபிள்ஸ் கல்வி நிலையத்தின் முதல்வராகப் பொறுப்பு ஏற்ற முதல் ஆசியர் என்னும் பெருமைக்குரியவர் திரு அம்பியவாகர்.

சளிக்காய்ச்சல் ஏற்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர், நேற்று காலை ஆறு மணியளவில் காலமானார் என்று அவரது மருமகன் டாக்டர் பத்மநாதன் கூறினார். இலங்கை நாட்டில் பிறந்த திரு அம்பியவாகர், கல்வி இயக்குநர் பதவி ஏற்று சிங்கப்பூரின் கல்வி மேம்பாட்டுக்கு பெரிதும் சேவையாற்றியவர். தனது கல்வி அனுபவத்தை இவர் "90 ஆண்டு பள்ளி அனுபவம்" என்ற புத்தகமாக எழுதி வெளியிட்டிருக்கிறார்.

தனது வாழ்க்கை வரலாற்றையும் புத்தகமாக திரு அம்பியவாகர் எழுதியிருக்கிறார். அவரது மனைவி மங்களேஸ்வரி அம்பியவாகர், பாலஸ்டியர் ஆண்கள் பள்ளியின் முன்னாள் முதல்வர். அம்பியவாகரின் நல்லுடல் லவண்டர் ஸ்திரீட்டில் உள்ள சிங்கப்பூர் காஸ்கெட் கம்பெனியிலிருந்து இன்று மாலை 5.15 மணிக்கு மவுண்ட் வெர்னன் தகனச் சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு எரியூட்டப்படும். பொது மக்கள் இன்று பிற்பகல் 2 மணிமுதல் (சிங்கப்பூர் காஸ்கெட் 3வதுமாடி எமரால்டு அறையில்) இறுதி மரியாதை செலுத்தலாம்.

திரு அம்பியவாகருக்கு பிள்ளைகள் ஐவர் (ஒருவர் காலமாகிவிட்டார்), பேரப் பிள்ளைகள் அறுவர், கொள்ளுப் பேரப்பிள்ளைகள் நால்வர் உள்ளனர்.

**- சித்திரா துரைசாமி**

# A MAN OF QUIET DIGNITY PASSES ON...



MR. V. AMBIAVAGAR, one of our community's oldest and most respected members passed away on Wednesday 9th January, 2002. He was 96.

An active member of various associations since 1924, he was a Trustee of Sri Senpaga Vinayagar Temple at one time.

He was also the President of the Ceylon's Sports Club and the first Asian Principal of Raffles Institution.

A model of quiet dignity, Mr. Ambiavagar spent the past few years as advisor to the community - readily offering suggestions and help to the younger group, whenever assistance was required.

The Management Committee and Members of the
Singapore Ceylon Tamils' Association and
Sri Senpaga Vinayagar Temple extend our deepest
condolences to the family. The community has lost a good man.

***"No evil can happen to a good man,
Either in life or after death."***

**- Socrates**